# சுவாமி விவேகானந்தர்: இளைய சமுதாயத்தின் கலங்கரை விளக்கம்

# Swami Vivekananda: A Beacon of Inspiration for the Youth

***முனைவர் வெ. செல்வசுப்பிரமணியன்***
இணைப் பேராசியர், தமிழ்த்துறை
அரசு கலைக்கல்லூரி (தன்னாட்சி)
கோயமுத்தூர், இந்தியா

**Dr. V. Selvasubramanian**
*Associate Professor of Tamil*
*Government Arts College (Autonomous)*
*Coimbatore, India*

## ஆய்வுச் சுருக்கம்

*இந்தியாவை உருவாக்குவதில் ஒரு மாபெரும்திருப்புமுனையாகசுவாமிவிவேகானந்தர். வீரமும், வேகமும், அன்பும், அறிவும் கலந்து உருவாகிய ஓர் அற்புத ஆற்றலாகத் திகழ்ந்தார். ‘எழுந்திருங்கள், விழித்திருங்கள் எனக்கூறி இளைய சமுதாயத்திற்கு பல்வேறு போதனைகளை வழங்கியவர். அவரது போதனைகள் இளைய சமுதாயத்திற்கு கலங்கரை விளக்காய்த் திகழ்ந்தமையை இக்கட்டுரையில் காண்போம்.*

## Abstract

*Swami Vivekananda was a pivotal force in the creation of India. He embodied a remarkable power, combining courage, dynamism, love, and wisdom. By urging the youth to “Arise, awake,” he provided various teachings to inspire and guide them. This article explores how his teachings acted as a beacon of light for the younger generation, guiding them through challenging times.*

**Citation**

Selvasubramanian, V. “Swami Vivekananda: A Beacon of Inspiration for the Youth.” *Journal of Tamil Culture and Literature*, vol. 4, no. 2, 2024, pp. 28–31.

**முன்னேறு**

*என் வீரக்குழந்தைகளே! முன்னேறுங்கள் பணம் இருந்தாலும் சரி, இல்லாமல் போனாலும் சரி முன்னேறிச் செல்லுங்கள். தொடர்ந்து முன்னேறுங்கள். எதுவுமே உங்களை எதிர்த்து நிற்க முடியாது என இளைஞர்களுக்கு அரை கூவுகின்றார். இதையே வள்ளுவரும்,'' அருமை யுடைத்தென்று அசாவாமை வேண்டும், பெருமை முயற்சி தரும்'' என்பார்.*

**உண்மையே உயர்வு**

*இளமையும், அழகும் மறைந்து போகும் ஆயுளும் செல்வமும் மறைந்து போகும். பெயரும் புகழும் மறைந்து போகும். மலைகளும் கூட உடைந்து தூளாகிவிடும். நட்பும், அன்பும் மறைந்து போகும். உண்மை ஒன்றே நிலைத்து நிற்கும். மகாத்மாகாந்தியும் தனது வாழ்க்கையில் உண்மை ஒன்றையே பினபற்றினார்.*

***''உள்ளத்தாற் பொய்யாது ஒழுகின் உலகத்தார்***
***உள்ளத்துள் எல்லாம் உளன்''***

*எனவே அவர் அனைவராலும் போற்றப்பட்டார்.*

**அன்பு**

*எல்லோருக்கும் தாசனாக உள்ளவனே, எல்லோருக்கும் எஜமானன் ஆகிறான யாருடைய அன்பு தாழ்ந்தவன், உயர்ந்தவன் என்ற பாகுபாடு காட்டுகிறதோ, அவன் ஒருபோதும் தலைவன் ஆகமாட்டான். யாருடைய அன்பிற்கு எல்லையே இல்லையோ, உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற வேறுபாடு இல்லையே அந்த அன்பு உலகத்தையே வென்றுவிடும். உண்மை வாழ்வே இன்றைய உலகின் தேவை. கொழுந்துவிட்டு எரிகின்ற அன்பு கொண்ட சுயநலம் இல்லாத வாழ்க்கை உடையவர்களே உலகிற்குத் தேவை. அத்தகையஅன்பு ஒவ்வொரு சொல்லையும் இடிபோன்று இறங்கச் செய்யும். அன்பு பலனாளிக்காமல் போவதில்லை. என் மகனே! இன்றோ, நாளையோ யுகாந்தரத்திலோ உண்மை வெல்வது நிச்சயம் உனது மனித சகோதரர்களை நேசி க்கிறாயா? கடவுளை எங்கே போய் தேடுகிறாய் நீ? ஏழைகள் துன்புறுபவர்கள், பலவீனர்கள் அனைவரும் தெய்வங்கள் அல்லவா? அவர்களை ஏன் முதலில் வழிபடக்கூடாது. அன்பின் எல்லாம் வல்ல ஆற்றலில் நம்பிக்கை கொள். உன்னிடம் அன்பு இருக்கிறதா இருந்தால் நீ எல்லாம் வல்லவன். நீ முற்றிலும் சுயநலம் அற்றவனா? அப்படியானால் உன்னை யாராலும் தடுக்க முடியாது. எனவே அன்பு செய். ''மகாத்மாகாந்தியும் அன்பு ஒருபோதும் தனக்கென உரிமை கொண்டாடுவதில்லை. பழி வாங்குவதில்லை'' என்பார். வேதாத்திரி மகரிஷியும் ''அனைத்துயிரும் ஒன்றென்று அறிந்த அடிப்படையில் ஆற்றும் கடமை யெல்லாம் அன்பின் செயலாகும்'' என்பார். இராமாயணத்தில் நாம் காணும் உறவுகளின் அடிப்படை அன்பே. எல்லா மனிதர்களிடத்தும் அன்பு செலுத்துவதே மனித நேயம். வள்ளலாரும்'' ஆருயிர்க்களுக்கெல்லாம் நான் அன்பு செயல் வேண்டும்'' என்று ஆண்டவனிடம் வேண்டுவதை நாம் காணலாம்.*

**உழைப்பே வெற்றி**

*வெற்றி பெற வேண்டுமானால் இடைவிடாத முயற்சியும் தீவிர சங்கல்பமும் உங்களிடம் வேண்டும். நான் கடலையே குடித்துவிடுவேன். எனது சங்கல்பத்தால் மலைகளே தூளாகிவிடும் என்று கூறுபவன் இடையீடின்றிப் பாடுபடுபவன் ஆவான். அத்தகைய ஆற்றலை, சங்கல்பத்தைப் பெறுங்கள். கடினமாக உழையுங்கள். இலட்சியத்தை அடைவீர்கள். தூய்மை பொறுமை, விடாமுயற்சி இவையே வெற்றிக்கான வழிகள். இதையே குறளும்'' முயற்சி திருவினையாக்கும், முயன்றின்மை இன்மை புகுத்தி விடும்'' என விளக்கும்.*

**நம்பிக்கை வை**

*மனம் சோர்ந்து விடாதீர்கள். பாதை மிகவும் கடினமானது. கத்தி முனையில் நடப்பது போன்று சோர்வடையாதீர்கள். எழுந்திருங்கள், விழித்திருங்கள், குறிக்கோளை லட்சியத்தை அடைந்தே தீருங்கள். உங்களிடம் நம்பிக்கை வையுங்கள். எல்லா ஆற்றலும் உங்களிடம் உள்ளது. அதை உணருங்கள். வெளிப்படுத்துங்கள். தன்னம்பிக்கை செயல்முறையில் பின்பற்றப்படுமானால் நம்மிடையே உள்ள துயரங்களும், தீமைகளும் பெரும்பாலும் அழிந்துவிடும், வள்ளுவரும் ''வேண்டிய வேண்டியாங்கு, எய்தலால் செய்தவம் ஈண்டு முயலப்படும்'' என்பார்.*

**பயன்மின்மையைப் புகுத்து**

*எழுந்திருங்கள், விழித்திருங்கள், இனியும் உறங்காதீர்கள் எல்லாத் தேவைகளையும், துன்பங்களையும் தீர்க்கும் ஆற்றல் இளைஞர்களாகிய உங்கள் ஒவ்வொருவரிடமும் இருக்கிறது. இதை நம்புங்கள். அந்த ஆற்றல்.வெளிப்படும் என்று எல்லோரிடமும் சென்று பிரச்சாரம் செய்யுங்கள். ஆன்மாவின் பெருமையைச் சிங்கம் போல் கர்ஜனை செய்யுங்கள். எழுந்திருங்கள், விழித்திருங்கள். லட்சியத்தை அடையும் வரை நில்லாதீர்கள் என்று முழங்கி எல்லோருடைய மனதிலும், பயமின்மையைப் புகுத்துங்கள். பாரதியும், ''அச்சமில்லை, அச்சமில்லை அச்ச மென்பதில்லையே உச்சி மீது வானிடிந்து வீழுகின்ற போழ்திலும் அச்சமில்லை அச்ச மில்லை அச்சமென்பதில்லையே'' என்று கூறுவார். எனவே எழுந்திருங்கள், உறுதியுடனும் தைரியத்துடனும் இருங்கள். பொறுப்பு முழுவதையும் உங்கள் தோளிலே சுமந்து கொள்ளுங்கள். பலமே வாழ்வு. பலவீனமே மரணம். பலமே இன்பம். பலமே என்றென்றும் மரணமிலாப் பெருவாழ்வு. பலவீனமே ஓயாத சோர்வும் துயரமும் தரும்.*

**இந்தியாவை உயர்த்து**

*இந்தியாவை உயர்த்த வேண்டும். ஏழைகளுக்கு உணவு தரவேண்டும். கல்வியைப் பரப்பவேண்டும். சாதிக் கொடுமைகள் வேண்டாம். ஒவ்வொருவருக்கும் சோறு இன்னும் அதிகம் வேண்டும். இன்னும் அதிகமாக வாய்ப்புகள் வேண்டும். உன்னில் ஊக்கத் தீ பற்றட்டும். பிறகு அதை எல்லா இடத்திலும் பரப்பு. பாரதியும் ''வயிற்றுக்குச் சோறிடல் வேண்டும் இங்கு வாழும் மனிதருக்கெல்லாம் பயிற்றுப் பல கல்வி தந்து இந்த பாரை உயர்த்திடல் வேண்டும்'' சாதிக் கொடுமைகள் வேண்டாம் எனில், அன்பில் தழைத்திடும் வையம். அன்பென்று கொட்டு முரசே மக்கள் அத்தனை பேருக்கும் நிகராம்'' என்று பாடுவார். என் குழந்தைகளே! ஏழைகளுக்காக பாமரர்களுக்காக ஒதுக்கப்பட்டவர்களுக்காக உணர்ச்சி கொள்ளுங்கள் உணர்ச்சியில். ஆழ்ந்து கொள்ளுங்கள். இதயமே நின்று மூளைகுழம்பி உங்களுக்கும் பைத்தியமே பிடித்துவிடுமெனத் தோன்றும் வரையிலும் உணர்ச்சி கொள்ளுங்கள். அனைவரும் வேலை செய்யவேண்டும். அது சரியானதாக நல்லதாக இருக்குமானால் சமூகம் நமது பக்கம் திரும்பியே ஆக வேண்டும். அப்பர்பெருமானும் ''என் கடன் பணி செய்து கிடப்பதே'' என்பார். எதுவுமே உங்களை எதிர்த்து நிற்க முடியாது.*

**கீழ்ப்படிதல்**

*கீழ்ப்படிதல் என்னும் நற்குணத்தை வளர்த்து வாருங்கள். கீழ்ப்படிதல் இல்லாவிட்டால் சக்திகளை ஒன்று திரட்டி மையப்படுத்துவது என்பது இயலாத காரியம். பல சமையல்காரர்கள் சேர்ந்தால் பதார்த்தத்தையே கெடுத்துவிடுவார்கள். இந்தியாவில் நம்மிடம்*

*இல்லாத முக்கியமான ஒன்று பலர்சேர்ந்து ஓர் அமைப்பாக வேலை செய்வது. நிர்வாகத்தைப் பொறுத்தவரை அதை முற்றிலும் உங்கள் கைகளிலேயே வைத்துக் கொள்ளுங்கள். இதன் முதல் ரகசியம் கீழ்ப்படிதல்.*

**குறை கூறாதே**

*யாருடைய உற்சாகத்தையும் குலைப்பதுகூடாது. குறை சொல்வதை அடியோடு விட்டுவிடவேண்டும். நல்லது என்று தெரிந்தால் அதற்கு உதவு. இல்லாவிட்டால் அவர்களுக்குத் தவற்றைப் புரிய வை. புறநானூறும் "நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும் அல்லது செய்தல் ஓம்புமின்" என்று புகலும். ஒருவரையொருவர்குறை கூறுவதே சர்வ நாசத்திற்கும் மூலம். ஓர் இயக்கத்தை உடைத்தெறிய அதுவே மூலகாரணமாகும்.*

**முடிவுரை**

*எதிர்கால இந்திரிய உன்னதமாக விளங்க வேண்டுமானால் நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து ஒரே மனம் கொண்டவர்களாகி ஒரு சங்கமமாக ஆக வேண்டும். எழுமின், விழுமின். நமது தாயாகமாகிய பாரத தேவி அழிவற்ற அரியணையின் மீது அமர்ந்திருப்பதைப் பாருங்கள். அமைதியும் வாழ்த்தும் நிறைந்த குரலில் பாரத அன்யையின் மகிமையை உலகம் முழுதும் பிரகடனப்படுத்துங்கள் என நவபாரதத்திற்கு சுவாமி விவேகானந்தர்வழங்கும் போதனைகள் இனிதே விளங்கும்.*

## References


1. Adiswarananda, Swami. (2006). Vivekananda, World Teacher: His Teachings on the Spiritual Unity of Humankind. Woodstock, Vermont: Sky Light Paths Pub.
2. Bharathi, K. S. (1998). Encyclopedia of Eminent Thinkers. New Delhi: Concept Publishing Company.
3. Das, S. K. (1991). A History of Indian Literature: 1800-1910, Western Impact: Indian Response. Sahitya Akademi.
4. Kishore, B. R. (2001). Swami Vivekananda. Diamond Pocket Books.
5. Maharaj, A. (2020). Śivajñāne jīver sevā: Reexamining Swami Vivekananda's Practical Vedanta in the Light of Sri Ramakrishna. Journal of Dharma Studies, 2(2), 175-187.
6. Majumdar, R. C. (1963). Swami Vivekananda Centenary Memorial Volume. Kolkata: Swami Vivekananda Centenary.